
Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்




மதுரை பதிப்பு | *மணி 54 | * ஓசை 35 | உள்ளூர் - 04.02.2026 | புதன் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 54 | * Issue 35 | வெளியூர் - 05.02.2026 | வியாழன் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

100 ஆண்டுகளுக்கு பின்... "திரிகிரஹி யோகம்"

ஊதியம் உயர்வு! குஷியில் தூய்மை பணியாளர்கள்

12-ந்தேதி பொது வேலைநிறுத்தம்!

2-ம் கட்ட தேர்தல் வாக்குறுதிகளை அறிவித்தார் இபிஎஸ்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் நடைபெற்ற அரசு விழாவில், 390 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவிலான 199 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 254 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 24 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இவ்விழாவில் வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர். கே. பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் து. ரவிக்குமார், தரணிவேந்தன். சட்டமன்ற உறுப்பினர்கள் க. பொன்முடி, கே.எஸ்.மஸ்தான், இலட்சுமணன், அந்நியூர் சிவா, மணிகண்ணன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பொன். கௌதமசிகாமணி, முதல்வரின் முகவரித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் பெ.அமுதா, சமூக பாதுகாப்புத் திட்டத்தின் ஆணையர் கிரண் குராலா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஷே. ஷேக் அப்துல் ரஹ்மான், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு முழுவதும் உள்ள இளைஞர்களின் களவுகளை பதிவு செய்ய, "என் கனவு, என் எதிர்காலம்' என்ற இணையதளத்தினை தொடங்கி வைத்தார். இவ்விழாவில் வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம். தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் து. ரவிக்குமார், தரணிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் க. பொன்முடி, கே.எஸ். மஸ்தான், இலட்சுமணன், அந்நியூர் சிவா, மணிகண்ணன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பொன். கௌதமசிகாமணி, முதல்வரின் முகவரித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் பெ.அமுதா, சமூக பாதுகாப்புத் திட்டத்தின் ஆணையர் கிரண் குராலா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஷே. ஷேக் அப்துல் ரஹ்மான், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் ஸ்டாலின் தலைமையில் தமிழ்நாடு அமைச்சரவை கூட்டம்!



சென்னை, பிப். 04–

2026ம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்ற தேரதல் விரைவில் நடைபெற உள்ளதால், அரசு தாக்கல் செய்ய உள்ள இடைக்கால பட்ஜெட் குறித்து அமைச்சரவை கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது. இதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் பிப்ரவரி 5ல் தமிழ்நாடு அமைச்சரவை கூட்டம் நடைபெறுகிறது. சட்டசபை தேர்தல் தேதி பிப்ரவரி மாத இறுதியில் அறிவிக்க வாய்ப்புள்ள நிலையில் இந்த அமைச்சரவை கூட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

## ஈரானில் பதற்றம்.. பயத்தில் தங்கத்தில் பணத்தை கொட்டும் முதலீட்டாளர்கள்..

ஈரான், பிப். 04–

தங்கம் விலையில் திங்கட்கிழமை பதிவான சரிவுக்கு பின்பு தொடர்ந்து 2வது நாளாக விலை உயர்ந்து வருகிறது. இது மட்டும் அல்லாமல் 4430 டாலர் வரையில் சரிந்த ஒரு அவுன்ஸ் தங்கம் வெறும் 2 நாட்களில் 5,082.02 டாலர் வரையில் புதன்கிழமை உயர்ந்து அதிர்ச்சி கொடுத்துள்ளது. இந்த உயர்வுக்கு முக்கிய காரணம் ஈரான் நாட்டில் உருவான பதற்றம் தான். கடந்த வாரம் ஏற்பட்ட வரலாற்று ரீதியான கடுமையான ஏற்ற இறக்கங்களுக்கு பிறகு பதிவான இந்த உயர்வு முதலீட்டாளர்கள் மத்தியில் பல கேள்விகளை எழுப்பி வரும் வேளையில் ஈரான் நாட்டில் உருவான பதற்றம் தங்கம் மீண்டும் முக்கிய முதலீடாக மாற்றியுள்ளது.



அரேபிய கடலில் அமெரிக்க விமானம் தாங்கி கப்பல் USS Abraham Lin–coln–க்கு அருகில் வேகமாக நெருங்கிய வந்த ஈரான் ட்ரோனை அமெரிக்க ராணுவம் சுட்டு வீழ்த்தி யுள்ளது. ஈரான் மக்கள் போராட்டத்தில் அமெரிக்காவின் தலையீடு பெரும் பிரச்சனையாக இருந்த நிலையில், தற்போது ஈரான் ட்ரோன் அமெரிக்க போர் கப்பலை தாக்க முயன்றுள்ளது. டிரம்ப் ஈரான் நாட்டில் ராணுவ தாக்குதல் மூலம் ஈரான் அரசை கவிழ்க்க மக்களுக்கு உதவி செய்வதாக அறிவித்தார். ஆனால் அமெரிக்க தாக்குதலுக்கு வளைகுடா நாடுகள் கடுமையான எதிர்ப்பை தெரிவித்த காரணத்தால் டிரம்ப் பின் வாங்கினார். இதேவேளையில் ஈரானில் மக்கள் போராட்டத்திற்கு எதிராகவும், அரசுக்கு ஆதரவமாகவும் மக்கள் கிளம்பினர். இதனால் அமெரிக்காவின் ராணுவ தாக்குதல் பதற்றம், மக்கள் போராட்டம் தொடர்பான பதற்றம் குறைய துவங்கியது.

இந்த சூழ்நிலையில் தான் ஈரான் ட்ரோனை அமெரிக்கா சுட்டு வீழ்த்தியது மூலம் மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றம் அதிகரித்து உள்ளது. இதனால் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஈரானுக்கு எதிராக ராணுவ நடவடிக்கை எடுக்கலாம் என்று பரிசீலித்து வருகிறார். இந்த சம்பவம் வளைகுடா சந்தையில் மீண்டும் பாதுகாப்பு சொத்தான தங்கத்திற்கான தேவையை உயர்த்தியுள்ளது.

ஈரான், அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தை ஓமானில் நடக்க வேண்டும் என்றும், துருக்கியில் வேண்டாம் என்றும் கோரியுள்ளது. அணு திட்டம் தொடர்பான இருதரப்பு பேச்சு இதில் மட்டுமே இருக்க வேண்டும் என்றும் திட்டவட்டமாக ஈரான், அமெரிக்கா உடன் தெரிவித்துள்ளது. இந்த பேச்சுவார்த்தை ஏற்கனவே சிக்கலான நிலையில் உள்ளதால் முதலீட்டாளர்கள் இந்த பேச்சுவார்த்தையை கூர்ந்து கவனித்து வருகின்றனர்.

இதோடு மற்றொரு சம்பவத்தில் ஹார்முஸ் நீரிணையில் (Strait of Hor–muz) ஈரான் துப்பாக்கி படகுகள் அமெரிக்க டேங்கரை நெருங்கியதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இந்த இரு சம்பவங்களும் ஈரான் – அமெரிக்கா நாடுகள் மத்தியில் இந்த வாரம் நடக்கும் பேச்சுவார்த்தை சற்று பலவீனப்படுத்தியுள்ளன. இதனால் தங்கம் போன்ற பாதுகாப்பு சொத்துக்களுக்கு தேவை மீண்டும் அதிகரித்துள்ளது. இந்த நிலையில் முதலீட்டா ளர்கள் அமெரிக்கா–ஈரான் இடையேயான பதற்றத்தை கவனமாக கண்காணித்து வருகின்றனர். இந்த புவிசார் அச்சுறுத்தல் பாதுகாப்பு சொத்துக்களான தங்கத்தின் மீதான தேவையை மீண்டும் அதிகரித்துள்ளது.


## எப்ஸ்டீன் கோப்புகள்

# கொரோனா பெருந்தொற்று மனிதாபிமான பிரச்சனையா?

## திட்டமிட்ட வியாபாரமா?

அமெரிக்கா, பிப். 04–

அமெரிக்க நீதித்துறை (DOJ) சமீபத்தில் ஜெஃப்ரி எப்ஸ்டீன் தொடர்பான ஆயிரக்கணக்கான ஆவணங்களை வெளியிட்டுள்ளது. அந்த ஆவணங்களில், இதுவரை பெரிதாக பேசப்படாத சில அதிர்ச்சி தகவல்கள் இருப்பதாக கூறப்படுகிறது.




இந்த கோப்புகளின் படி, பெருந்தொற்று காலங்களை (pandemic) லாபமாக மாற்றும் 20 ஆண்டுகால நிதி கட்டமைப்பு கொரோனா வருவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே திட்டமிடப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதன்படி, வெளிநாட்டு தடுப்பூசி நிதிகள், பாண்டமிக் ஏற்பட்டால் பணம் கிடைக்கும் காப்பீட்டு திட்டங்கள், தொண்டு நிறுவனங்களின் பெயரில் லாபம் ஈட்டும் நிதி அமைப்புகள், மருந்து நிறுவனங்கள் மற்றும் உலக பொருளாதார அமைப்புகளுடன் இணைந்து செயல்படும் வலையமைப்பு உள்ளதாக ஆவணங்கள் சொல்கின்றன.

இந்த வலையமைப்பு பில் கேட்ஸ், JP Morgan வங்கி மற்றும் ஜெஃப்ரி எப்ஸ்டீன் ஆகியோருடன் தொடர்புடையதாகவும் கூறப்படுகிறது.

**அதிர்ச்சி தகவல் 1: தடுப்பூசிகளுக்கான வெளிநாட்டு நிதி**

2011–ம் ஆண்டு ஆகஸ்டில், எப்ஸ்டீன், JP Morgan Asset Management நிறுவனத்தின் தலைமை நிர்வாகி மேரி எர்டோஸுக்கு மின்னஞ்சல் அனுப்பியுள்ளார்.

அதில், கேட்ஸ் தொடர்புடைய ஒரு தொண்டு நிதிக்கு, "தடுப்பூசிகளுக்காக வெளிநாட்டில் ஒரு தனி நிதி அமைப்பை தயாராக வைத்திருக்க வேண்டும்" என்று எழுதியுள்ளார்.

இந்த மின்னஞ்சல் அனுப்பியவர், ஏற்கனவே பாலியல் குற்றத்தில் தண்டிக்கப்பட்டவர் என்பதையும் மீறி, எந்த விதமான சட்ட எச்சரிக்கையும் எழவில்லை என்பது கேள்வியை எழுப்புகிறது.

**அதிர்ச்சி தகவல் 2: 'தொண்டு' என்ற பெயரில் லாபம்**

அதே மின்னஞ்சல் பதிலில், "தொண்டு நிறுவனத்தில் இருந்து பணம் சம்பாதிப்பது கேள்விக்குரிய ஒன்று, அதனால் லாபம் ஈட்டும் பகுதிகள் தனியாக இருக்க வேண்டும்" என்று எப்ஸ்டீன் எழுதியதாக கூறப்படுகிறது.

இதன் மூலம், தொண்டு அமைப்பின் பெயரில் லாபம் ஈட்டும் திட்டம் இருப்பதை அவர் நேரடியாக ஒப்புக்கொண்டதாக குற்றம் சாட்டப்படுகிறது.

**அதிர்ச்சி தகவல் 3: பாண்டமிக் ஒரு முதலீட்டு துறை**

2017–ம் ஆண்டு மே மாதத்தில், பில் கேட்ஸின் அறிவியல் ஆலோசகர் போரிஸ் நிகோலிக், எப்ஸ்டீன் மற்றும் கேட்ஸுக்கு அனுப்பிய மின்னஞ்சலில், "எரிசக்தி, பாண்டமிக் போன்ற துறைகள் முதலீட்டுக்கு நல்ல வாய்ப்பு" என்று குறிப்பிட்டுள்ளார்.

அதாவது, பாண்டமிக் ஒரு அவசர நிலை அல்ல; ஒரு முதலீட்டு துறையாக பார்க்கப்பட்டதாக ஆவணங்கள் கூறுகின்றன.

**அதிர்ச்சி தகவல் 4: பாண்டமிக் வந்தால் தானாக பணம்**

2017 ஜனவரியில், எப்ஸ்டீன் மொபைலில் இருந்த தகவல் ஒன்றில்,

எப்ஸ்டீனின் தொழில் வாய்ப்பு வழங்கும் வலையமைப்பில் உள்ள ஒருவரால் உருவாக்கப்பட்ட "சுவிஸ் ரீ (மறு காப்பீடு) நிறுவனத்தின் சுகாதாரப் பொருட்களை உருவாக்கும் குழுவில் சேருங்கள். பெருந்தொற்றுக்களுக்காக ஒரு திட்டத்தை உருவாக்கினோம், பாராமெட்ரிக் தூண்டுதலை (பாண்டமிக் ஏற்பட்டால் தானாக பணம் வழங்கும் காப்பீட்டு திட்டம்) உருவாக்க உதவினோம்." என்று ஒரு வேலை வாய்ப்பு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு சில மாதங்கள் கழித்து, உலக வங்கி, சுவிஸ் ரீ நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட பாண்டமிக் பாண்டுகள் என்ற புதிய நிதி திட்டத்தை வெளியிட்டது. அதில் கொரோனா போன்ற வைரஸ்கள் கூட ஆபத்தாக பட்டியலிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

**அதிர்ச்சி தகவல் 5: எப்ஸ்டீனை நேரடியாக கேட்ட பில் கேட்ஸ்?**

2013 ஆகஸ்ட் 8–ம் தேதி அதாவது எப்ஸ்டீன் தண்டிக்கப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு. எழுதிய ஒரு ஒப்பந்தக் கடிதத்தில், "போரிஸ் நிகோலிக்கான பிரதிநிதியாக ஜெஃப்ரி எப்ஸ்டீன் இருக்க வேண்டும் என்று பில் கேட்ஸ் வலியுறுத்தினார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்காக எந்த விதமான நலன் மோதல் குற்றச்சாட்டும் எழாது என்று, கேட்ஸ் தரப்பில் எழுத்துப்பூர்வ ஒப்புதல் அளிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இந்த ஆவணங்கள் உண்மையென நிரூபிக்கப்பட்டால்,

பாண்டமிக் முன்கூட்டியே வியாபார வாய்ப்பாக திட்டமிடப்பட்டதா?

தொண்டு என்ற பெயரில் லாபம் ஈட்டப்பட்டதா?

அரசுகள் மற்றும் உலக அமைப்புகள் இதை அறிந்திருந்தனவா? என்ற பல கேள்விகள் எழுகின்றன.

## ஊதியம் அதிரடி உயர்வு! குஷியில் தூய்மை பணியாளர்கள்..!

சென்னை, பிப். 04–

தமிழகத்தில் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் பணியாற்றும் தூய்மைக் காவலர்களுக்கான மதிப்பூ தியம் ரூ.5000 இருந்து ரூ.6,000 ஆக உயர்த்தி தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. தூய்மை பணியாளர்களுக்கான மதிப்பூதியத்திற்காக ரூ.417 கோடி கூடுதலாக ஒதுக்கி தமிழக அரசு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.




தமிழகம் முழுவதும் பல லட்சம் தூய்மை பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இதில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த 150 வீடுகளுக்கு ஒரு தூய்மை பணியாளர் என்ற அடிப்படையில், 66,025 தூய்மை பணியாள்ரகள் பணியாற்றி வருகின்றனர். இந்த தூய்மை பணியாளர்கள் கிராம ஊராட்சிகளில் உள்ள வீடுகளுக்கு நேரில் சென்று குப்பைகளை சேகரித்து தரம் பிரிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில், இவர்களுக்கான மதிப்பூதியம் குறைவாக இருப்பதாகவும், தங்களு க்கான மதிப்பூதியத்தை உயர்த்த வேண்டும் என கோரிக்கை எழுந்தது. இதுகுறித்து சட்டப்பேரவையில் கூட அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதாவது, தூய்மை பணியாளர்களின் மாதாந்திர மதிப்பூதியம் ரூ.3,600லிருந்து ரூ.5,000 ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் தெரிவித்தார். இந்த நிலையில், இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக தமிழக அரசு தூய்மை பணியார்களு க்கான மதிப்பூதியத்தை ரூ.6000 ஆக உயர்த்தி அரசாரணை வெளியிட்டுள்ளது.

முன்னதாக, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் பணியாற்றும் தூய்மைக் காவலர்களுக்கான மதிப்பூதியம் ரூ.5,000 வழங்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், ரூ.6,000 ஆக உயர்த்தி தமிழக அரசு அரசாணை வெளியிட்டது. இதற்காக ரூ.417 கோடி கூடுதல் நதியை தமிழக அரசு ஒதுக்கியுள்ளது. இதனால், தூய்மை பணியாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மேலும், தூய்மை பணியாளர்களின் நலனில் தமிழக அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது. அவர்களுக்காக பல்வேறு திட்டங்களை யும் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. அண்மையில் கூட, சென்னையில் வேலை செய்யும் தூய்மை பணியாளர்களு க்கு மூன்று வேளையும் உணவு வழங்கும் திட்டம் செயல்படு த்தப்பட்டது.

இந்த திட்டம் வரும் நாட்களில் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில், தூய்மை பணியாளர்களின் மதிப்பூதியம் உயர்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தலையங்கம்
மதுரை மணி
புதன்கிழமை 04.02.2026
விசுவாவசு தமிழ் வருடம்
தை மாதம் 21-ம் தேதி

## இந்தியா-வின் மாஸ்டர் மைண்ட்..!!




இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே கூடிய விரைவில் வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட போகிறது. அமெரிக்க அதிபர் டிரம்ப் மற்றும் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் இதனை உறுதி செய்திருக்கின்றனர்.

முதல் கட்டமாக பிரதமர் நரேந்திர மோடி இந்திய பொருட்களுக்கு விதிக்கப்பட்ட 50 சதவீத வரி விதிப்பை வெறும் 18 சதவீதமாக குறைத்து இருக்கிறார். இந்தியாவை பொறுத்தவரை இந்த ஓராண்டு காலமாக வர்த்தக ஒப்பந்த ரீதியாக மிகச் சிறந்த ஒரு ஆண்டாக தான் அமைந்திருக்கிறது. 30க்கும் அதிகமான நாடுகளின் சந்தைகளின் கதவுகள் இந்தியாவுக்காக திறக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த ஓராண்டுகளில் நரேந்திர மோடி தலைமையிலான அரசு அடுத்தடுத்து பல்வேறு வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது. இவை அனைத்துமே இந்தியாவுக்கு சிறந்த ஏற்றுமதி வாய்ப்புகளை ஏற்படுத்தி தந்துள்ளன. ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒப்பந்தம்: குடியரசு தினம் முடிந்து அடுத்த நாள் அதாவது ஜனவரி 27ஆம் தேதி அன்று அனைத்து ஒப்பந்தங்களுக்கும் தாய் என அழைக்கப்படும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கும் இந்தியாவிற்கும் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது. பல ஆண்டுகளாக இரு தரப்புக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வந்த நிலையில் ஜனவரி 27ஆம் தேதி அன்று இந்தியாவுக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்து இடப்பட்டது.

இதன்படி இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக வரிகளை படிப்படியாக குறைப்பது என முடிவு செய்யப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 96 சதவீத பூஜ்ஜிய வரி அல்லது குறைந்த வரி என்ற அறிவிப்பை வெளியிட்டு இருக்கின்றன. இதன் மூலம் இந்தியாவை சேர்ந்த வர்த்தகர்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் இருக்கும் 27 நாடுகளின் சந்தைகளுக்கான கதவுகள் திறக்கப்பட்டு இருக்கின்றன. இதனால்தான் இது" Mother of all deals "என அழைக்கப்படுகிறது. இந்தியாவை சேர்ந்த காலனி உற்பத்தியாளர்கள், துணிமணி உற்பத்தியாளர்கள், தோல் பொருட்களை உற்பத்தி செய்யக்கூடியவர்கள், மருந்து என பல்வேறு உற்பத்தி துறை சார்ந்தவர்களுக்கும் இந்த ஒப்பந்தம் மிக முக்கியமானதாக இருக்கிறது. தற்போதுள்ள 136 பில்லியன் டாலர் மதிப்புள்ள இரு தரப்பு ஒப்பந்தம் 5 ஆண்டுகளில் இரண்டு மடங்காக போகிறது.

**இந்தியா பிரிட்டன் வர்த்தக ஒப்பந்தம்:**

கடந்த 2025 ஆம் ஆண்டு ஜூலை 24ஆம் தேதி இந்தியாவிற்கும் பிரிட்டனுக்கும் இடையே வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன் மூலம் பெரும்பாலான பொருட்களுக்கு இரு நாடுகளுமே வரியை படிப்படியாக குறைத்து குறைந்தபட்ச வரி அல்லது பூஜ்ஜியம் என்ற நிலையை எட்டுவது என முடிவெடுக்கப்பட்டது. தற்போதுள்ள 56 பில்லியன் டாலர் மதிப்புள்ள இருதரப்பு வர்த்தகம் 2030க்குள் இரட்டிப்பாக வாய்ப்புள்ளது.

**ஓமன் –இந்தியா:**

ஓமனுக்கும் இந்தியாவுக்கும் 2025 டிசம்பர் மாதத்தில் விரிவான வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன் மூலம் 98 சதவீத பொருட்கள் வரி இல்லாமல் ஓமன் நாட்டு சந்தையில் நுழைவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்திய வியாபாரிகளுக்கு மத்திய கிழக்கு சந்தையில் முக்கியமான ஒரு வாய்ப்பினை இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தி தந்திருக்கிறது.

**நியூசிலாந்து :**

கடந்த டிசம்பர் மாதத்தில் தான் இந்தியாவும் நியூசிலாந்தும் வர்த்தக ஒப்பந்தம் மேற்கொண்டன. இதன் மூலம் 95 சதவீதத்திற்கும் மேற்பட்ட பொருட்களுக்கு வரிச்சலுகைகள் கிடைத்துள்ளன. அதே போல அடுத்ததாக 2025 அக்டோபர் ஒன்றாம் தேதியில் இருந்து ஐஸ்லாந்து, நார்வே மற்றும் ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகளோடு இந்தியா வர்த்தக கூட்டமைப்பை அறிவித்தது. கூடிய விரைவில் அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தமும் கையெழுத்தாக உள்ளது. இவை அனைத்துமே இந்திய உற்பத்தி துறைக்கு உலகம் முழுவதுமே சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தி தந்துள்ளன. பொதுமக்களுக்கு வெளிநாட்டு பொருட்களின் வருகையால் தரமான போட்டி மிகுந்த விலையில் பொருட்களை வாங்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.



பழனி தைப்பூசம் திருவிழா பக்தர்களுக்கு 29 வது வார்டு பொதுமக்கள் சார்பில், அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் முன்னாள் கவுன்சிலர்கள் வி ஏ பி குமார், எம் முருகானந்தம், திமுக கவுன்சிலர் சுரேஷ், மற்றும் சோமு, சுந்தரம், எம் கே கணேஷ், இளங்கோ, மகாலிங்கம், சங்கர் & கோ குமார் ஆகியோர் பங்கேற்றனர்

## சென்னை: சாரதி ஃபைனான்ஸ் ரத்ததான முகாம்: வெற்றிகரமாக நடத்தப்பட்டது!



சென்னை, பிப். 04–

சென்னையில் எம்.எஸ்.எம்.இ. துறையை மையமாகக் கொண்ட NBFC நிறுவனமான சாரதி ஃபைனான்ஸ், பொதுமக்களுக்கு திறந்த ரத்ததான முகாமை வெற்றிகரமாக நடத்தியது. பல நகரங்களில் ஒரே நேரத்தில் நடைபெறும் சமூக நல முனைப்பின் ஒரு பகுதியாக இந்த முகாம் நடைபெற்றது. நிறுவன ஊழியர்கள், கூட்டாளர்கள் மற்றும் அருகிலுள்ள பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தன்னார்வ ரத்ததானம் செய்தனர்.

இந்த முகாமின் நோக்கம், தன்னார்வ ரத்ததானத்தின் அவசியத்தை வலியுறுத்துவதோடு, பாதுகாப்பான ரத்தத்திற்கு தொடர்ந்து தேவை கொண்டுள்ள உள்ளூர் மருத்துவமனைகளுக்கு ஆதரவு வழங்குவதாகும். இடத்திலேயே ஒருங்கிணைப்பு மற்றும் விழிப்புணர்வுநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால், முகாம் சீராகவும் சிறப்பாகவும் நடைபெற்றது.

இந்த முயற்சி குறித்து சாரதி ஃபைனான்ஸ் நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர், "எம்.எஸ்.எம்.இ.களின் வளர்ச்சிக்கான நிதி ஆதரவை வழங்குவதோடு, சமூக நலன் மற்றும் பொது சுகாதாரத்திற்கும் பங்களிப்பது எங்களின் பொறுப்பாகும். ரத்ததானம் போன்ற முயற்சிகள் மூலம் சமூகத்துடன் இணைந்து செயல்படுவதில் பெருமை கொள்கிறோம்," என்று தெரிவித்தார்.

## கர்ப்பகாலத்தில் மறைந்திருக்கும் பசி தாய்குழந்தை ஆரோக்கியத்தை பாதிக்கிறது: டாக்டர் B. ஆனந்தப்பிரியா

சென்னை , பிப். 04–

கர்ப்பிணிப் பெண்கள் போதுமான அளவு உணவு எடுத்துக்கொண்டாலும், அத்தியாவசிய வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் குறைவாக இருப்பதால் "மறைந்திருக்கும் பசி" (ஊட்டச்சத்துக் குறைபாடு) ஏற்படுகிறது என்று சக்தி கிளினிக், வசந்த நகர், சென்னை சேர்ந்த மகப்பேறு மற்றும் மகளிர் நல மருத்துவர் டாக்டர் B. ஆனந்தப் பிரியா தெரிவித்துள்ளார். கலோரி போதுமானதாக இருந்தாலும், தாய் மற்றும் வளரும் குழந்தைக்கு தேவையான நுண்ணூட்டச் சத்துக்கள் இல்லாமல் இருப்பது ஒரு அமைதியான நெருக்கடி என அவர் கூறினார்.

இந்தப் பிரச்சினை இந்தியாவில் அதிகமாக காணப்படுகிறது என்றும், உலகளவில் 1549 வயதுடைய பெண்கள் கோடிக்கணக்கானோர் இரத்தச்சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். இரும்புச் சத்து குறைபாட்டின் மட்டுமல்லாமல், வைட்டமின் பி12, வைட்டமின் டி போன்ற முக்கிய சத்துக்கள் குறைபாடுகளும் கர்ப்பிணிப் பெண்களிடம் அதிகமாக இருப்பது கவலைக்குரியது என்றார்.

இரும்புச் சத்து, போலிக் அமிலம் ஆகியவற்றுக்கு அப்பால், வைட்டமின் சி, வைட்டமின் டி, கால்சியம், ஒமேகா–3 (DHA), கோலின், அயோடின், துத்தநாகம், புரதம் போன்ற பல ஊட்டச்சத்துக்கள் குழந்தையின் மூளை, எலும்பு, நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் முழுமையான வளர்ச்சிக்குத் தேவையானவை என டாக்டர் ஆனந்தப்பிரியா விளக்கினார். இவை குறைந்தால் தாய்மார்களுக்கு சோர்வு, தொற்று அபாயம், பிரசவ சிக்கல்கள்; குழந்தைகளுக்கு வளர்ச்சி தடை மற்றும் நீண்ட கால ஆரோக்கிய சவால்கள் உருவாகலாம் என்றார்.

இந்தச் சுழற்சி முறியடிக்க பல்வகைப்பட்ட ஊட்டச்சத்து உணவுகள், மருத்துவர் ஆலோசனையுடன் இலக்கு வைக்கப்பட்ட கூடுதல் சத்து மாத்திரைகள், மற்றும் ஊட்டச்சத்து விழிப்புணர்வு அவசியம் என அவர் வலியுறுத்தினார். "மறைந்திருக்கும் பசியை" உணர்ந்து, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துடன் அணுகினால் தாய்குழந்தை ஆரோக்கியத்தில் பெரிய மாற்றத்தை உருவாக்க முடியும் என டாக்டர் B. ஆனந்தப்பிரியா தெரிவித்தார்.

## மின்தூக்கி மற்றும் நகரும் படிக்கட்டு துறை நிபுணர்களுக்கான இந்தியாவின் முதல் Symposium & Quiz சென்னை வரவேற்கிறது!

சென்னை, பிப். 04–

சென்னை வர்த்தக மையத்தில் 13 மற்றும் 14 பிப்ரவரி 2026 அன்று, மின்தூக்கி மற்றும் நகரும் படிக்கட்டு துறை நிபுணர்களுக்கு மட்டும் அர்ப்பணிக்கப்பட்ட இந்தியாவின் முதல் Symposium & Quiz 2026 நிகழ்வை ISEE நடத்துகிறது. உருவாகும் புதிய தொழில்நுட்பங்கள், பாதுகாப்பு புதுமைகள், ஒழுங்குமுறை இணக்கம் மற்றும் சிறந்த நடைமுறைகள் குறித்து உயர்தர தெரிவுப் பகிர்வை உருவாக்கும் நோக்கத்துடன் இந்த இரண்டு நாள் நிகழ்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.




இந்த நிகழ்வை தமிழ்நாடு அரசு தலைமை மின்சார ஆய்வாளர் திரு. வி. ராமகிருஷ்ணன் அவர்கள் தொடங்கி வைக்கிறார். தொடக்க விழாவில் L&T Construction நிறுவனத்தின் MEP வடிவமைப்பு தலைவர் திரு. ஆர். பாலகிருஷ்ணன், EECMAI தலைவர் மற்றும் Wittur Group ஆசியா பசிபிக் தலைவர் திரு. சுராஜ் தோடி மரத், மற்றும் REVROY Pvt Ltd நிறுவனர் இயக்குநர் திரு. ரவிசங்கர் தண்டவன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்கிறார்கள். KONE, OTIS, Mitsubishi Electric, Fujitec, Johnson Lifts உள்ளிட்ட நிறுவனங்களைச் சேர்ந்த 2,000–க்கும் மேற்பட்ட நிபுணர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த முயற்சி குறித்து TAK Consulting நிறுவனத்தின் பிரதான ஆலோசகரும் ஏற்பாட்டாளருமான திரு. T.A.K. மேத்யூஸ் அவர்கள், துறையில் உள்ள நிபுணர்கள் அறிவைப் பகிர்ந்து கொண்டு, புதுமைகளை பரிமாறி, சமீபத்திய தொழில்நுட்பங்கள் மற்றும் ஒழுங்குமுறை இயக்கங்களைப் பற்றி புதுப்பித்து கொள்ளும் ஒருங்கிணைந்த கற்றல் மேடையாக இந்த Symposium அமையும் என்று தெரிவித்தார். Symposium உடன் இணைந்து ISEE Elevator Industry Quiz 2026 அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் நடைபெறுகின்றன. பதிவு செய்ய: 95660 77719 / 79775 56164.

## ஒட்டன்சத்திரத்தில் இலவச கண் பரிசோதனை முகாம்!




ஒட்டன்சத்திரம் பிப். 04–

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் முத்தூட் பைனான்ஸ் நிறுவனமும் மதுரை டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச கண் பரிசோதனை முகாம் முத்தூட் பைனான்ஸ் மண்டல மேலாளர் லட்சுமணன் தலைமையில் நடைபெற்றது.இம்முகாமில் முத்தூட் பைனான்ஸ் வாடிக்கையாளர்கள் மற்றும் ஆண்கள் பெண்கள் என ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பல்வேறு வகையான கண் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.இம் முகாமில் முத்தூட் பைனான்ஸ் கிளை குழு தலைவர் துர்கா பிரஸ் பிரசாத் ஒட்டன்சத்திரம் முத்தூட் பைனான்ஸ் விற்பனை அதிகாரி வேல்முருகன் மதுரை அகர்வால் கண் மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் கலந்து கொண்டனர் நிகழ்ச்சியின் நிறைவில் முத்தூட் பைனான்ஸ் ஒட்டன்சத்திரம் கிளை மேலாளர் செல்லப்பாண்டி நன்றி கூறினார்.



பழனி பஸ் நிலையத்தில் தமிழக வெற்றி கழகத்தின் 3ஆம் ஆண்டு தொடக்க விழாவையொட்டி, பழனிபாலன் தலைமையில் பயணிகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.



## 100 ஆண்டுகளுக்கு பின்... கும்பத்தில் திரிகிரஹி யோகம்...!



வேத ஜோதிட கணிப்புகள் படி வரும் பிப்ரவரி 13–ஆம் நாள், கும்ப ராசியில் திரிகிரஹி யோகம் உருவாக இருக்கிறது. ஆம், பிப்ரவரி 6–ஆம் நாள் செல்வத்தை அளிக்கும் சுக்கிரன் கும்ப ராசியில் குடியேறுகிறார். தொடர்ந்து வரும் பிப்ரவரி 13–ஆம் நாள், கிரகங்களின் அரசனான சூரியன் கும்ப ராசியில் குடியேறுகிறார். இதன் விளைவாக அங்கு ஏற்கனவே குடியிருக்கும் ராகுவுடன் இணைந்து வலிமையான திரிகிரஹி யோகத்தை உண்டாக்குகின்றனர். காற்று ராசியான கும்ப ராசியில் உண்டாகும் இந்த கிரக நிலை மாற்றமானது மேஷம் முதல் மீனம் வரை உள்ள அனைத்து ராசியினருக்கும் தனித்துவமான பலன்களை கொண்டு வருகிறது. அதிலும் குறிப்பாக மிதுனம், மகரம் மற்றும் தனுசு ஆகிய 3 ராசியினருக்கு கூடுதல் நன்மைகளை அளிக்க இருப்பதாக நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

**மிதுனம் – மதிப்பும், மரியாதையும் கிடைக்கும்**

மிதுன ராசியில் பிறந்தவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கிடைக்கும் ஒரு காலமாக இது பார்க்கப்படுகிறது. கும்ப ராசியில் உண்டாகும் இந்த சுப யோகம், மிதுன ராசி கொண்டவர்களின் அதிர்ஷ்ட வீட்டில் மாற்றத்தை கொண்டு வருகிறது. இதன் தாக்கம், உங்கள் வாழ்க்கையில் பல்துறை வெற்றிகள் கிடைக்கும். தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் பல கிடைக்கும் – தொழில்முறை பயணங்கள் பல செய்யும் வாய்ப்பும் கிடைக்கும்.



வீட்டில் மங்களகரமான விஷயங்கள் நடக்கும் வாய்ப்பும் காணப்படுகிறது. அதாவது, வீட்டில் உள்ள இளையவர்களின் திருமண காரியங்கள் கைகூடும், விரைவில் திருமணத்தை முடிக்கும் வாய்ப்பும் கிடைக்கும். இதன் விளைவாக உங்கள் சேமிப்புகளை இழக்க வேண்டி இருக்கும்.

கவலை வேண்டாம், உங்கள் செலவுகளை சமாளிக்க போதுமான வருமானம் கிடைக்கும். தொழில் வெற்றி, வியாபாரத்தில் வளர்ச்சி போன்ற விஷயங்கள் உங்கள் முயற்சிகளை வெற்றி பாதையில் அழைத்துச் செல்லும். தொழில் வாழ்க்கையில் காணப்பட்ட தடைகள் விலகும், விரைவில் உங்கள் விருப்பமான பணிகளை தொடங்கும் வாய்ப்பும் கிடைக்கும்.

ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டவர்கள், ஆன்மீகத்துடன் தொடர்புடைய தொழில் செய்யும் வாய்ப்பு காணப்படுகிறது. குடும்ப உறவுகளுடன் இணைந்து ஆன்மீக சுற்றுலா செல்லும் வாய்ப்பும் காணப்படுகிறது. காதல் வாழ்க்கையில் முன்னர் எப்போதும் இல்லாத அளவுக்கு மகிழ்ச்சியான தருணங்களை கொண்டு வரும் வாய்ப்பும் காணப்படுகிறது!

**தனுசு – பல்துறை வெற்றிகள் கிடைக்கும்!**



தனுசு ராசியில் பிறந்தவர்களுக்கு பல்துறை வெற்றிகள் கிடைக்கும் ஒரு காலமாக இது பார்க்கப்படுகிறது. ஆளுமை மிக்க சூரியன் பெயர்ச்சியால் உண்டாகும் இந்த திரிகிரஹி யோகமானது, தனுசு ராசி கொண்டவர்களின் ஜாதகத்தில் 3–வது வீட்டில் மாற்றத்தை கொண்டு வருகிறது. இந்த மாற்றமானது, உங்கள் மன வலிமையை மேம்படுத்துகிறது, எதிர்பார்த்த மாற்றத்தை உங்கள் வாழ்க்கையில் கொண்டு வருகிறது.

தொழில் வாழ்க்கையில் துணிச்சலான முடிவுகளை எடுக்க உங்களை ஊக்கப்படுத்தும், எதிர்பார்த்த வெற்றிகளை கொண்டு வரும் வழிகளையும் காண்பித்துக் கொடுக்கும். சர்வதேச தொடர்புகளை கொண்டிருக்கும் நபர்கள், தங்கள் தொழிலை அடுத்த கட்டத்திற்கு விரிவுப்படுத்தும் வாய்ப்பினை பெறலாம்.

சர்வதேச அளவில் விரிவுப்படுத்தும் ஒப்பந்தங்கள் கிடைக்கும், பெரிய ஆர்டர்களும் கிடைக்கும். மரம் சார்ந்த வேலைகள், உலோகம் சார்ந்த வேலைகளை செய்து வரும் நபர்கள், தங்கள் தொழிலில் போதுமான வருமானத்தை காணும் வாய்ப்பு காணப்படுகிறது. புதிய வாகனம், வீடு, சொத்து வாங்கும் வாய்ப்பு காணப்படுகிறது. கடன் பிரச்சனைகள் முடிவுக்கு வரும். உங்கள் விருப்பமான தொழிலை தொடங்கும் வாய்ப்பும் கிடைக்கும்.

புதிய தொழில் தொடங்க விரும்பும் நபர்களுக்கு உடன் பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். அலுவலக பணி மேற்கொண்டு வரும் நபர்கள், தங்கள் திறமைக்கு தோதான பணிகளை பெறுவார்கள். பதவி உயர்வுடன் கூடிய ஊதிய உயர்வையும் பெறுவார்கள்.

**மகரம் – போதுமான வருமானம் கிடைக்கும்!**

மகர ராசியில் பிறந்தவர்களுக்கு இந்த திரிகிரஹி யோகமானது, வியாபாரத்தில் காணப்பட்ட போட்டிகளை சமாளிக்க உதவுகிறது. போதுமான வருமானம் மற்றும் எதிர்பார்த்த லாபத்தையும் கொண்டு வருகிறது. தொழில் வாழ்க்கையில் காணப்பட்ட பிரச்சனைகள் மற்றும் மனஸ்தாபங்களை முடிவுக்கு கொண்டு வரும். உங்கள் நிதி நிலையை மேம்படுத்தும் வாய்ப்பும் கிடைக்கும்.



கூட்டாண்மையில் தொழில் செய்து வரும் நபர்கள், தங்கள் கூட்டணியில் புதியவர்களை சேர்ப்பார்கள். புதியவர்களின் வருகை புதிய தொழில் வாய்ப்புகளை கொண்டு வரும், உங்கள் பொருளாதார நிலையை மேம்படுத்தும் வாய்ப்புகளையும் கொண்டு வரும். ஏற்கனவே செய்து வரும் தொழிலில் போதுமான வருமானம் கிடைக்க, கூடுதல் வருமானத்தை கொண்டு வரும் தொழில் வாய்ப்புகளையும் உண்டாக்குவீர்கள்.

அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்க, முன்னர் செய்த முதலீடுகள் வழியே போதுமான வருமானத்தை கொண்டு வரும் வாய்ப்பும் கிடைக்கும். அதிலும் குறிப்பாக, நிலத்தில் செய்த முதலீடுகள் போதுமான வருமானத்தை கொண்டு வரும். குடும்ப உறவுகளுடன் காணப்பட்ட மனஸ்தாபங்கள் முடிவுக்கு வரும்.

காதல் வாழ்க்கை குறித்து பேசுகையில், உங்கள் காதல் துணையின் ஆதரவு உங்கள் இலக்கை அடைய ஊக்கப்படுத்தும். திருமணம் முடித்தவர்கள் வாழ்க்கையிலும் மகிழ்ச்சியான தருணங்கள் நிறைந்திருக்கும். குழந்தைகள் ஆரோக்கியம் மேம்படும், அவர்களின் வழியே ஒரு நற்செய்தியும் உங்களை தேடி வரும்!

## பழனி டு ஈரோடு ரெயில்வே பாலத்தை செயல்படுத்த வேண்டும்: காங்கிரஸ் கோரிக்கை!



பழனி, பிப். 04–

பழனி டு ஈரோடு ரெயில்வே பாதை திட்டத்தை செயல்படுத்த வேண்டும். காங்கிரஸ் கட்சி கோரிக்கை. பழனியில் திண்டுக்கல் மேற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவராக நியமிக்கப்பட்டார் சாமிநாதன். அவருக்கு காமராஜர் தேசிய பேரவை மற்றும் காங்கிரஸ் நகர வட்டார மேற்கு மண்டல கமிட்டி சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்பு தனியார் மண்டபத்தில் மாவட்டத் தலைவர் சாமிநாதனுக்கு அறிமுக கூட்டம் நடைபெற்றது. இதற்கு நகரத் தலைவர் முத்து விஜயன் தலைமை வகித்தார். மாவட்டத் துணைத் தலைவர் எம் முருகானந்தம், மண்டல தலைவர் வீரமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மேற்கு மாவட்ட தலைவர் சாமிநாதன் சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் பழனி டு ஈரோடு ரெயில் பாதை திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்றும், மகாத்மா காந்தி 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தை எந்த மாற்றமும் இல்லாமல் செயல்படுத்த வேண்டும் என்றும், தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதில் காமராஜர் தேசிய பேரவை நிர்வாகி பாப்புசாமி, முன்னாள் கவுன்சிலர் சுந்தர், சிறுபான்மை பிரிவு முகமது அலி, ராமநாத கிருஷ்ணன், கவுன்சிலர் பத்மினி முருகானந்தம், எஸ்.சி.பி. பாலக்குமார், எஸ்.சி.எஸ்.டி பிரிவு குப்புசாமி, ஆகியோர் உள்பட ஏராளமான பங்கேற்றனர்.




## ஜிம் போக தேவையில்லை.. அகால மரணமடையும் அபாயம் 10% வரை குறையும்..!!



உடல் உழைப்பற்ற நவீன வாழ்க்கை முறையில், நாம் அன்றாடம் செய்யும் ஒரு மிகச்சிறிய மாற்றம் நம் ஆயுளைப் பல ஆண்டுகள் நீட்டிக்கும் வல்லமை கொண்டது என்பதைச் சமீபத்திய மருத்துவ ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. 2026–ஆம் ஆண்டு உலகப்புகழ் பெற்ற 'லான்செட்' (The Lancet) மருத்துவ இதழ் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையின்படி, ஒருவர் தனது தினசரி வழக்கத்தில் கூடுதலாக வெறும் 5 நிமிடங்கள் மட்டும் நடப்பாரேயானால், அவர் அகால மரணமடையும் அபாயம் சுமார் 10 சதவீதம் வரை குறைகிறது.

**அமர்ந்தே இருப்பவர்களுக்கு ஓர் அபாய எச்சரிக்கை :**

இன்றைய ஐடி கலாச்சாரம் மற்றும் அலுவலக பணிகளில் நீண்ட நேரம் ஒரே இடத்தில் அமர்ந்து பணியாற்றுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. இது 'அமைதியான கொலையாளி' என்று அழைக்கப்படும் பல்வேறு நோய்களுக்கு வழிவகுக்கிறது. இதனைத் தவிர்க்க, ஒவ்வொரு அரை மணி நேரத்திற்கும் ஒருமுறை எழுந்து சில நிமிடங்கள் நடக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை 60 சதவீதம் வரை கட்டுப்படுத்த முடியும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இந்த எளிய நடைப்பயிற்சி ரத்த அழுத்தத்தைச் சீராக வைப்பதோடு, இதய தசைகளுக்குத் தேவையான வலிமையையும் அளிக்கிறது.

**மன ஆரோக்கியம் :**

நடைப்பயிற்சி என்பது உடல் ரீதியான பலன்களை தாண்டி, மன ரீதியாகவும் பெரும் மாற்றங்களை உருவாக்குகிறது. நாம் நடக்கும்போது உடலில் 'எண்டோர்பின்கள்' (Endor–phins) எனப்படும் மகிழ்ச்சியைத் தூண்டும் ஹார்மோன்கள் சுரக்கின்றன. இது மன அழுத்தத்தைக் குறைத்து, மனதை உற்சாகமாக வைத்திருக்க உதவுகிறது. மேலும், முறையான நடைப்பயிற்சி செரிமான மண்டலத்தைத் தூண்டி, எலும்புகள் மற்றும் மூட்டுகளை உறுதிப்படுத்துகிறது.

**எளிய மாற்றங்கள் :**

ஜிம்மிற்குச் சென்று கடினமான உடற்பயிற்சிகளை செய்ய முடியாதவர்கள் கூட, அன்றாட வாழ்வில் சில மாற்றங்களைச் செய்வதன் மூலம் ஆரோக்கியத்தைப் பெற முடியும். உதாரணமாக, லிஃப்ட்டை தவிர்த்துப் படிக்கட்டுகளை பயன்படுத்துவது, வாகனங்களைச் சற்றுத் தொலைவில் நிறுத்திவிட்டு நடந்து செல்வது போன்ற சிறு இலக்குகள் உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியைப் பன்மடங்கு அதிகரிக்கும். இத்தகைய எளிய வாழ்வியல் மாற்றங்கள் நம்மைத் தொற்றுநோய்களிலிருந்து பாதுகாத்து, நீண்ட கால ஆரோக்கியத்திற்கு அஸ்திவாரமாக அமையும்.

## நாடு முழுவதும் 12-ந்தேதி பொது வேலைநிறுத்தம்! தொழிற்சங்கங்கள் அறிவிப்பு...



டெல்லி, பிப். 04–

மத்திய அரசை கண்டித்து நாடு முழுவதும் வருகிற 12–ந்தேதி ஒரு நாள் வேலைநிறுத்தம் நடைபெறுகிறது. மத்திய அரசின் கொள்கைகளைக் கண்டித்து, இந்தியா முழுவதும் உள்ள தொழிலாளர் சங்கங்கள் பிப்ரவரி 12 அன்று நாடு தழுவிய பொது வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளன. . இந்த போராட்டத்தை, மத்திய தொழிற்சங்கங்கள் சி.ஐ.டி.யு, ஏ.ஐ.டி.யு.சி, ஐ. என்.டி.யூ.சி, எல்.பி.எப். உள்ளிட்ட 12 தொழிற்சங்கங்கள் இணைந்து அறிவித்து உள்ளன.

தொழிற்சங்கங்களின்படி, தொழிலாளர் சீர்திருத்தங்கள், வேலைவாய்ப்புச் சட்டங்களில் மாற்றங்கள், சமூகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் தொழிலாளர்களை விட பெருநிறுவனங்களுக்குச் சாதகமாக இருப்பதாகக் கருதப்படும் பொருளாதாரக் கொள்கைகள் உட்பட, தொழிலாளர்களைப் பாதகமாகப் பாதித்துள்ளதாகக் கூறப்படும் பல்வேறு அரசாங்க நடவடிக்கைகளைக் கண்டித்து இந்த போராட்டம் நடத்தப்படுகிறது.

தொழிலாளர்களின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டுவிட்டதாகத் தொழிலாளர் தலைவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். மேலும், சிறந்த வேலைப் பாதுகாப்பு, நியாயமான ஊதியம், வலுவான சமூகப் பாதுகாப்பு மற்றும் பணியிடத்தில் மேம்படுத்தப்பட்ட உரிமைகளை அவர்கள் கோருகின்றனர்.

முறைப்படுத்தப்பட்ட மற்றும் முறைசாரா துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் இந்த வேலைநிறுத்தத்தில் இணையுமாறு அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

தமிழ்நாட்டில், பல தொழிற்சங்கக் கிளைகள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்க உறுதியளித்துள்ளன. முக்கிய நகரங்கள் மற்றும் தொழில்துறை மையங்களில் ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொழிலாளர் அமைப்புகள் மக்களைத் திரட்டும் முயற்சிகளை ஒருங்கிணைத்து வருகின்றன. மேலும், வேலைநிறுத்த நாளன்று அமைதியான முறையில் தங்கள் போராட்டத்திற்கு ஆதரவளிக்குமாறு பொதுமக்களை அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். 12–ந்தேதி தமிழ்நாட்டில், அண்ணா சாலையில் உள்ள தபால் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டமும் நடத்த திட்டமிட்டு இருப்பதாக சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

## முதுகலை ஆசிரியர் பணி கலந்தாய்வு - பள்ளிக்கல்வித்துறை முக்கிய அறிவிப்பு!



ஆசிரியர் பணி கலந்தாய்வு

சென்னை, பிப். 04–

தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 2023–24, 2024–25 ஆண்டுக்கான முதுகலை ஆசிரியர் காலிப்பணியிடங்களுக்காக தெரிவு செய்யப்பட்ட முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் பட்டியல் 22.01.2026 அன்று இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அவர்களுக்கு EMIS இணைய தளம் வாயிலாக online மூலம் பணி நியமன கலந்தாய்வு நடத்தப்படவுள்ளது. அதற்குத் தேவையான ஆயத்தப் பணிகளை மேற்கொள்ள அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அரசு வழிகாட்டுதல்களை கொடுத்துள்ளது. அத்துடன், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர், முகவரி, தொலைபேசி எண் உள்ளிட்ட விவரங்கள் மாவட்ட வாரியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**பள்ளிக்கல்வித்துறை வழிகாட்டுதல்கள்**

– தெரிவு செய்யப்பட்ட அனைத்து பணி நாடுநர்களும் நேரடி நியமன கலந்தாய்வில் கலந்து கொள்ளத் தக்க வகையில் பள்ளிக் கல்வி இயக்ககத்தில் இருந்து கலந்தாய்வு நாள் தெரிவிக்கப்பட்ட உடன் பணிநாடுநர்களுக்கு உடன் தகவல் அளிக்கத் தேவையான ஆயத்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

– அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட User name/Password–ஐ பயன்படுத்தி ஒரே நேரத்தில் அனைத்து பாடங்களுக்கும் EMIS இணைய தளம் மூலம் கலந்தாய்வு நடத்தப்பட வேண்டும்.

– பாடவாரியான பணிநாடுநர்கள் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு கணினி மற்றும் இணைய தள வசதி ஏற்பாடு செய்ய வேண்டும். அதே போல் ஏற்கெனவே பயிற்சி பெற்ற கணினி இயக்குபவர்களை நியமனம் செய்து கொள்ள வேண்டும்.

கணினி மற்றும் இணைய தள வசதி இல்லாத பட்சத்தில் அருகாமையில் வசதி உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் நடத்தலாம். அவ்வாறு முதன்மைக் கல்வி அலுவலகம் அல்லாது வேறு இடத்தில் நடைபெறும் பட்சத்தில் பணிநாடுநர்களுக்கு எந்த இடத்தில் கலந்தாய்வு, எந்த நேரத்தில் நடைபெறவுள்ளது என்பதை தெளிவாக தெரிவிக்க வேண்டும்.

– இதற்கு முன்பு ஆன்லைன் கலந்தாய்வு எந்த வகையில் நடத்தப்பட்டதோ அந்த நடைமுறையை கடைபிடித்து அதற்கு உரிய முன்னேற்பாட்டு நடவடிக்கையை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

– கலந்தாய்வு நடைபெறும் நாள் அன்று தெரிவு செய்யப்பட்ட பணிநாடுநர்களின் கல்வித்தகுதி சான்றுகளான SSLC, HSC, Bachelors de–gree, Bed, Masters degree சான்றிதழ்கள் முதன்மைக்கல்வி அலுவலர்களால் சரிபார்க்கப்பட வேண்டும்.

– இதுதவிர Community certificate, PSTM certificate if applicable, Differently abled persons certificate if applicable ஆகிய சான்றிதழ்களையும் சரிபார்க்க வேண்டும்.

– பணி நாடுநர்கள் அவர்கள் விரும்பும் காலிப்பணியிடத்தினை தேர்வு செய்தவுடன், அதனை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

– எக்காரணம் கொண்டும் பணிநியமன ஆணை நாடுநர்களுக்கு கலந்தாய்வு அன்று வழங்கக் கூடாது.

– பணி நியமன ஆணை சென்னையில் நடைபெற உள்ள விழாவில் தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட உள்ளது.

– தங்கள் மாவட்டத்தில் பணிநியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு பணிநியமன ஆணையினை ஐந்து நகல் எடுத்து Folder–ல் வைத்து வரிசையாக அடுக்கி பட்டியலுடன் பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (மேல்நிலைக்கல்வி) அறையில் ஒப்படைக்கும் வகையில் தனி நபர் மூலம் அனுப்புமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுள்ளனர்.

## NRI: இந்தியர்களுக்கு கடன் கிடையாது..? புதிய விதியால் அமெரிக்காவில் பதற்றம்..!!

அமெரிக்கா, பிப். 04–

டிரம்ப் குழந்தையை கிள்ளிவிட்டு தொட்டிலை ஆட்டுவது போல் ஒருப்பக்கம் இந்தியா உட்பட உலகின் பல நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்துவிட்டு தற்போது அமெரிக்காவின் வர்த்தக துறை தன் நாட்டிற்கும், தன் நாட்டு மக்களுக்கு மட்டும் தான் என்ற மிகப்பெரிய நெருக்கடியை டிரம்ப் தலைமையிலான அரசு உருவாக்கியுள்ளது. அமெரிக்க சிறு வணிக நிர்வாகம் (SBA) பிப்ரவரி 2, 2026 அன்று மாபெரும் கொள்கை மாற்றத்தை அறிவித்துள்ளது. இதன்படி அமெரிக்க குடியுரிமை இல்லாதவர்கள், கிரீன் கார்ட் (legal permanent residents) உடையவர்கள் உட்பட SBA ஆதரவு பெற்ற வணிக கடன்களை பெற முடியாது. இந்த விதி மார்ச் 1, 2026 முதல் அமலுக்கு வரும் என அறிவித்துள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் "அமெரிக்கா ஃபர்ஸ்ட்" பொருளாதார கொள்கைக்கு இணையாக இந்த மாற்றம் கொண்டு வரப்பட்டு உள்ளது. அமெரிக்க நிதி சந்தையில் சமீப ஆண்டுகளில் ஏற்பட்ட மிகப்பெரிய திருத்தங்களில் ஒன்றாகும். ஏற்கனவே டிரம்ப் வெளிநாட்டில் இருந்து அமெரிக்காவுக்கு யாரும் வர கூடாது என்பதற்காக விசா கட்டுப்பாடுகளை கடுமையாக உயர்த்தியிருக்கும் வேளையில், தற்போது நிதியுதவி பிரிவிலும் கட்டுப்பாடுகள் உருவாகி வருகிறது. சரி முதலில் அமெரிக்க சிறு வணிக நிர்வாக கடன் திட்டம் என்றால் என்ன என்பதை முதலில் பார்ப்போம்.

**SBA கடன்கள் என்றால் என்ன..?**

US Small Business Administration (SBA) என்பது ஒரு அரசு அமைப்பு, இது வங்கியோ அல்லது நிதி நிறுவனமோ கிடையாது. அமெரிக்காவில் சிறு வணிகளை காக்கும் விதிமாக உருவாக்கப்பட்டது தான் இந்த அமைப்பு.

SBA ஆதரவு கடன்கள் என்பது அமெரிகாவில் இயங்கி வரும் சிறு வணிகங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மூலம் அளிக்கப்படும் கடன். SBA அமைப்பு இந்த கடன்களை நேரடியாக வழங்காவிட்டாலும், கடனின் ஒரு பகுதிக்கு வங்கிகளுக்கு உத்தரவாதம் அளிக்கிறது. இதனால் வங்கிகளின் ரிஸ்க் குறைந்து சிறு வணிகங்களுக்கு குறைந்த வட்டியில் கடன் அளிக்கிறது. தற்போது கொண்டு வரப்பட்டுள்ள மாற்றங்கள் மூலம் SBA–யின் கடன் திட்டங்களில் உரிமை மற்றும் தகுதி விதிகளை கடுமையாக்குகிறது. இந்த மாற்றம் அமெரிக்காவில் இருக்கும் இந்தியர்கள் உட்பட அனைத்து நாட்டினரும் வணிகங்களை துவங்குவதும், இயக்குவதை பாதிக்கும். இது அரசு அமைப்பு எடுத்துள்ள முடிவு என்பதால், இதை மெல்ல மெல்ல மற்ற வங்கிகளும் பாலோ செய்ய வாய்ப்புள்ளது என்ற அச்சம் உருவாகியுள்ளது. புதிய விதிகள் சொல்வது என்ன..? புதிய விதிகளின்படி SBA கடன் விண்ணப்பதாரர்கள் 100 சதவீத உரிமை அமெரிக்க குடிமக்கள் அல்லது அமெரிக்க கட்டுப்பாட்டில் இருக்கும் நாடுகளில் வசிக்கும் அமெரிக்க குடிமக்களாக இருக்க வேண்டும். இந்த கொள்கை அமெரிக்க ர்களை வணிகம் தொடங்கவும் வளர்க்கவும் ஆதரிப்பதற்காக SBA கொண்டுவரப்பட்ட மாற்றமாக தெரிவித்துள்ளது. இந்த மாற்றம் வெளிநாட்டில் இருந்து அமெரிகாவுக்கு வந்து நடத்தப்படும் வணிகங்களுக்கு பெரும் சவாலாக அமையும். அமெரிக்காவில் இந்தியர்கள், சீனர்கள், இலங்கையர்கள், வங்கதேசத்தினர் உள்ளிட்ட ஆசியாவை சேர்ந்தவர்கள் அதிகளவில் சிறு வணிகங்களை நடத்துகின்றனர். இந்த கடன் ஆதரவு இல்லாவிட்டால் அவர்களின் வணிக வளர்ச்சி பாதிக்கப்படும். இந்த அறிவிப்பு அமெரிக்காவில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. SBA கடன் இல்லை யெனில் வேறு வங்கிகளில் கடன் வாங்க முடியாமல் இல்லை, இந்த அமைப்பின் வாயிலாக கடன் வாங்கும் போது வட்டி குறைவாகவும், கடனுக்கான உத்தரவாதத்துடன் கிடைக்கும். இல்லையெனில் அதிக வட்டி விகிதத்தில் கடன் வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்படும்.




அமெரிக்காவில் வசிக்கும் இந்தியர்கள் வணிக கடன் பெறுவது இனி வரும் காலத்தில் கடினமாகிவிடுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. இதேபோல் கிரீன் கார்ட் வைத்திருந்தாலும், அமெரிக்கர்களுக்கு கிடைக்கும் சலுகை தடை பெறுவதால், இதன் எதிர்காலமும் கேள்விக்குறியாகியுள்ளது.

## லிபியா சர்வாதிகார அதிபர் கடாஃபியின் மகன் சுட்டுக்கொலை!

லிபியா, பிப். 04–

லிபியாவின் மறைந்த முன்னாள் சர்வாதிகார அதிபர் மும்மெர் கடாஃபியின் மகன் புதன்கிழமையன்று துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.





லிபியாவின் முன்னாள் அதிபர் மும்மெர் கடாஃபியின் மகன் சைஃப் அல் இஸ்லாம் கடாஃபி, வடமேற்கு லிபியாவின் ஜின்டான் நகரில் உள்ள அவரது வீட்டில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் படுகொலை செய்யப்பட்டதாக அவரின் அரசியல் கட்சி நிர்வாகி ஒருவர் தெரிவித்தார். கொல்லப்பட்ட சைஃப் அல் இஸ்லாம் கடாஃபிக்கு வயது 56. எண்ணெய் வளமிக்க வட ஆப்பிரிக்க நாடான லிபியாவில் சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேலாக சர்வாதிகார ஆட்சி நடத்தியவர் மும்மெர் கடாஃபி. இவர் கடந்த 2011 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போரின் போது சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். இவரது மறைவுக்குப் பிறகு, கடாபியின் அரசியல் வாரிசாக மகன் சைஃப் அல் இஸ்லாம் பார்க்கப்பட்டார். அப்போது கைது செய்யப்பட்ட சைஃப் பின்னர் 2017 ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்டார்.




**இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்**

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881


# வேலை வாய்ப்பு

### பாபா அணு ஆராய்ச்சி கழகம் 21 காலியிடங்கள்

Organization Name: BARC Bhabha Atomic Research Centre
Notification No: 01/2026 (R–IV)
Job Category: Central Govt Jobs
Employment Type: Regular Basis
Total No of Vacancies: 21 Technical Officer–D, Scientific Officer–E, Scientific Officer–D, Scientific Officer–C Posts
Place of Posting: All Over India
Starting Date: 30.01.2026
Last Date: 27.02.2026
Apply Mode: Online
Official Website: https://recruit.barc.gov.in/

### கொச்சின் ஷிப் யார்டு 64 காலியிடங்கள்

Organization Name: Cochin Shipyard Limited
Notification No: CSL/ P&A /RECTT/ PERMANENT/ EXECUTIVE TRAINEE/ 2026/1
Job Category: Central Govt Jobs
Employment Type: Regular Basis
Total No of Vacancies: 64 Executive Trainee Posts
Place of Posting: Cochin
Starting Date: 28.01.2026
Last Date: 20.02.2026
Apply Mode: Online
Official Website: https://cochinshipyard.in/

### கொச்சின் ஷிப் யார்டு 260 காலியிடங்கள்

Organization Name: Cochin Shipyard Limited
Job Category: Central Govt Jobs
Employment Type: Contract Basis
Total No of Vacancies: 260 Workmen Posts
Place of Posting: Cochin
Starting Date: 21.01.2026
Last Date: 07.02.2026
Apply Mode: Online
Official Website: https://cochinshipyard.in/

V.O.V.போர்ட் டிரஸ்ட் தூத்துக்குடி 08 வேலைவாய்ப்புகள்
Organization Name: V.O. Chidambaranar Port Authority
Notification No: GAD–EST10ESTC/3/2025–GAD(7392)/D
Job Category: Central Govt Jobs
Employment Type: Contract Basis
Total No of Vacancies: 08 Associate Consultant (Civil), Associate Consultant (HR), Professional Intern (Civil), Professional Intern (Horticulture), Professional Intern (Marine) Posts
Place of Posting: Tuticorin
Starting Date: 10.01.2026
Last Date: 09.02.2026
Apply Mode: Offline
Official Website: https://www.vocport.gov.in/

### டி.எம்.பி. வங்கியில் காலியிடங்கள்

Organization Name: Tamilnad Mercantile Bank Ltd.,
Employment Type: Regular Basis
Total No of Vacancies: Specialist Officer (Information Technology) Posts
Place of Posting: Chennai
Starting Date: 26.01.2026
Last Date: 09.02.2026
Apply Mode: Online
Official Website: https://www.tmbnet.in/tmb_careers/

### சலிம் அலி பறவையியல் மற்றும் இயற்கை வரலாறு மையம்–64 காலியிடங்கள்

Organization Name: Salim Ali Centre for Ornithology and Natural History
Notification No: SACON/RES/RCTMT/ADVT–01/2026
Job Category: Central Govt Jobs
Employment Type: Contract Basis
Total No of Vacancies: 36 Office Assistant/ MTS, Computer Assistant, Finance Assistant, Administrative Assistant, Senior Project Manager, Project Assistant, Project Associate & Project Scientist Posts
Place of Posting: Coimbatore
Starting Date: 22.01.2026
Last Date: 08.02.2026
Apply Mode: Online
Official Website: https://www.sacon.in/

## மூத்த கல்வியாளர் எஸ்.எஸ். ராஜகோபாலன் காலமானார்



சென்னை, பிப். 04–


தமிழ்நாட்டின் மூத்த கல்வியாளரும் ஆசிரியருமான முனைவர் எஸ்.எஸ். ராஜகோபாலன் வயதுமூப்பு மற்றும் உடல்நலக் குறைவால் சென்னை கோடம்பாக்கம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், செவ்வாய்க்கிழமை இரவு (பிப்.3) 11.54 மணிக்கு மருத்துவமனையில் காலமானார். அவரது உடல் மருத்துவ ஆய்வுக்கு ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியில் புதன்கிழமை ஒப்படைக்கப்படுகிறது.




மதுரை மணி
உள்ளூர் 04.02.26 வெளியூர் 05.02.26

# காங்கிரஸ் கட்சிக்கு கூடுதல் 'சீட்' கொடுத்தால் பாதிப்பு நமக்குத்தான்: திமுக மூத்த நிர்வாகிகள் 'திடீர்' போர்க்கொடி!

சென்னை, பிப். 04–
தமிழகத்தில் இன்னும் 2 மாத இடைவெளியில் சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. தேர்தலை எதிர்கொள்ள அரசியல் கட்சிகள் எல்லாம் சுறுசுறுப்பாக தயாராகிவருகின்றன.



கூட்டணி குறித்த பேச்சு வார்த்தை தொடர்கிறது.

இந்த நிலையில், தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள தேசிய கட்சியான காங்கிரஸ், இந்த முறை ஆட்சியில் பங்கு, 41 தொகுதிகள், 2 ராஜ்ய சபா 'சீட்', உள்ளாட்சி தேர்தலில் 20 சதவீதம் ஒதுக்கீடு என பல்வேறு கோரிக்கைகளை கூட்டணிக்கு தலைமை தாங்கும் தி.மு.க.விடம் முன்வைத்து வருகின்றது.

**தி.மு.க. மூத்த நிர்வாகிகள் போர்க்கொடி**

காங்கிரஸ் கட்சியில் கூட்டணி குறித்து பேச்சு வார்த்தை நடத்த கடந்த டிசம்பர் மாதமே குழு அமைக்கப்பட்டுள்ள நிலையில், தி.மு.க.வில் இன்னும் குழு அமைக்கப்படவில்லை. இதனால், காங்கிரஸ் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபாலின் தமிழக வருகையும் தள்ளிக்கொண்டே போகிறது. இந்த நிலையில், முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்த மூத்த தி.மு.க. நிர்வாகிகள், ''காங்கிரஸ் கட்சிக்கு கூடுதல் 'சீட்' கொடுத்தால் பாதிப்பு நமக்குதான்.

2016–ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் இப்போது கேட்பதுபோல் 41 தொகுதிகள் கொடுத்தோம். அதில், 8–ல் தான் வெற்றி பெற்றார்கள். அந்தமுறை நாம் ஆட்சி அமைக்க முடியாமல் போனதற்கு அவர்கள்தான் காரணம். எனவே, இந்த முறையும் அதே தவறை நாம் செய்து விடக்கூடாது. அவ்வாறு செய்தால் நமக்குதான் பாதிப்பு" என்று போர்க்கொடி தூக்கியுள்ளார்களாம்.

**மு.க.ஸ்டாலின் யோசனை**

இதனால், முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினும் யோசித்து வருகிறாராம். அதனால்தான், காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் கூட்டணி பேச்சுவார்த்தைக்கு தயாராக இருந்தாலும், தி.மு.க. ஆர்வம் காட்டாமல் மற்றொரு பக்கம் தே.மு.தி.க.விடம் பேச்சு வார்த்தையை மும்முரமாக நடத்தி வருகிறதாம். அதற்காக, திருவனந்தபுரம் வரை சென்று பிரேமலதாவை முக்கிய நிர்வாகிகள் சந்தித்து வந்திருக்கிறார்களாம். இதனால், தி.மு.க.வின் கூட்டணி கணக்கு இந்த முறை மாறும் என்று சொல்லப்படுகிறது.

# 2-ம் கட்ட தேர்தல் வாக்குறுதிகளை அறிவித்தார் இபிஎஸ்!

சென்னை, பிப். 04–
அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தை அடுத்து தமிழக சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு 2–ம் கட்ட வாக்குறுதிகளை எடப்பாடி பழனிசாமி இன்று அறிவித்தார். அதன் விவரம் வருமாறு:–

*முதியோர் உதவித்தொகை ரூ.2000 ஆக உயர்த்தப்படும்.

* ஆண்டுக்கு 3 கேஸ் சிலிண்டர்கள் இலவசமாக



வழங்கப்படும்.

* ஜல்லிக்கட்டு போட்டியின் போது வீரர் உயிரிழந்தால் குடும்பத்தினருக்கு ரூ.10 லட்சம் வழங்கப்படும்.

* ஜல்லிக்கட்டின் போது படுகாயமடைந்தால் ரூ.2 லட்சம் வழங்கப்படும்.

* மாணவர்கள் வங்கிகளில் பெற்ற கல்வி கடனை ரத்து செய்யப்படும்.

* மகளிர் சுய உதவிக்குழு கடன்கள் தள்ளுபடி செய்யப்படும்.

* சிறுபான்மையின மக்கள் சுய தொழில் தொடங்க வட்டியில்லா கடன் வழங்கப்படும் என்றார்.

# தனிக்கட்சி தொடங்க திட்டமா? சசிகலா பரபரப்பு பேட்டி!

சென்னை, பிப். 04–



சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா நினைவிடத்தில் சசிகலா இன்று அஞ்சலி செலுத்தினார். அப்போது அவரது ஆதரவாளர்கள், "துரோகிகளையும் எதிரிகளையும் வீழ்த்தி, சசிகலா தலைமையில் ஆட்சி அமைப்போம்'' என்று உறுதிமொழி எடுத்தனர். இது தொடர்பாகவும், வருகிற சட்டமன்றத் தேர்தலை தனிக்கட்சி தொடங்கி சந்திக்கப் போகிறீர்களா? என்பதையும் குறித்து நிருபர்கள் அவரிடம் சரமாரியாக கேள்விகள் எழுப்பினர். இதற்கு பதிலளித்து அவர் கூறியதாவது: "எதிரிகள் யார், துரோகிகள் யார் என்பது தமிழக மக்களுக்கு தெரியும். இது பற்றி நான் தனியாக விளக்கிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. வருகிற சட்டமன்றத் தேர்தலில் என் தலைமையில் நிச்சயம் அம்மா ஆட்சி அமைப்போம். அது எப்படி நடக்கும் என்பதை நீங்கள் விரைவில் தெரிந்து கொள்வீர்கள்,'' என்றார்.

அ.தி.மு.க.வை ஊழல் கட்சி என்று நடிகர் விஜய் விமர்சித்துள்ளாரே என்ற கேள்விக்கு பதிலளித்த சசிகலா, "அ.தி.மு.க. ஆட்சி எப்படி இருந்தது என்பது அனைவருக்கும் தெரியும். ஒவ்வொரு குடும்பத்தினரும், தமிழக மக்களும் அம்மாவின் ஆட்சி எப்படி இருந்தது என்பதை நன்றாக அறிந்து வைத்திருக்கிறார்கள். அதனால்தான் இன்றும் அம்மா ஆட்சி மீண்டும் மலரும் என்று அனைவரும் கூறிக் கொண்டிருக்கிறோம்,'' என்றார். தேசிய ஜனநாயக கூட்டணியில் டி.டி.வி. தினகரன் இணைந்திருப்பது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த சசிகலா, "ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு முடிவு இருக்கும். அதற்கேற்ப அவர்கள் செயல்பட்டு இருப்பார்கள். அதைப் பற்றி எல்லாம் நான் எப்படி கருத்து தெரிவிக்க முடியும்?'' என்றார்.

# வெளிநாடுகளில் இருந்து எவ்வளவு தங்கம் வரி இல்லாமல் கொண்டு வரலாம்? புதிய விதிகள் அமல்!

புதுடெல்லி, பிப். 04–
வெளிநாடுகளில் இருந்து இந்தியா வருகை தரும் இந்திய குடிமக்கள் விமானங்களிலோ, கப்பல்களிலோ விலைமதிப்புமிக்க பொருட்களை எடுத்து வந்தால் அதற்கு சுங்க வரி செலுத்துவது கட்டாயம் ஆகும். எனினும், குறிப்பிட்ட அளவு மதிப்பு வரை யிலான பொருட்களுக்கோ தங்க ஆபரணங்களுக்கோ வரி விதிக்கப்படாது. அதாவது தற்போது வரை ரூ.50 ஆயிரம் மதிப்புள்ள தங்க நகைகளை பயணிகள் தங்கள் உடைமைகளில் கொண்டு வரலாம். அதற்கு எந்த வரியும் கிடையாது. இந்த லக்கேஜ் விதிகளில் புதிய மாற்றத்தை கொண்டு வந்துள்ளது. மாற்றப்பட்ட இந்த புதிய விதி பிப்ரவரி 2 முதல் அமலுக்கு வந்துள்ளது.

இந்த புதிய விதிகளின்படி இந்தியாவில் வசிப்பவர்கள் அல்லது இந்திய சுற்றுலாப்



பயணிகள் அல்லது சுற்றுலா விசா இன்றி பிற விசாவில் வரும் வெளிநாட்டவர்கள் ரூ.75 ஆயிரம் மதிப்புள்ள பொருட்களை சுங்க கட்டணம் இன்றி எடுத்து வரலாம். வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் என்றால் ரூ.25 ஆயிரம் மதிப்புள்ள பொருட்கள் வரை வரியின்றி எடுத்து வரலாம். உடமை விதிகள் 2016ல் மத்திய நேரடி வரிகள் வாரியம் திருத்தம் கொண்டு வந்துள்ளது. இந்த புதிய திருத்தப்பட்ட விதிகள்தான் நேற்றுமுன்தினம் முதல் அமலுக்கு வந்துள்ளன.

இந்திய குடிமக்களாக இருந்து வெளிநாட்டில் ஓராண்டுக்கு மேல் வசிப்பவராக இருந்தால், 40 கிராம் வரையிலான தங்கத்தை வரியின்றி எடுத்து வர அனுமதி அளிக்கப்படும். ஆண் என்றால் 20 கிராம் வரை நகைகளுக்கு சுங்க வரி விலக்கு அளிக்கப்படும் என்று மத்திய நேரடி வரிகள் வாரியம் தெரிவித்துள்ளது.

# புதுச்சேரிக்கு பிரதமர் மோடி வருகை - முதல்மைச்சர் ரங்கசாமியுடன் பா.ஜ.க.வினர் ஆலோசனை!

புதுச்சேரி. பிப். 04–
பிரதமர் மோடி வருகிற 16–ந்தேதி அரசு முறை பயணமாக புதுச்சேரிக்கு வருவது உறுதியாகி உள்ளது. டெல்லியில் இருந்த வருகிற 15–ந் தேதி தமிழகத்திற்கு வரும் பிரதமர் மறுநாள் 16–ந்தேதி விமானம் மூலம் லாஸ்பேட்டை விமான நிலையத்திற்கு வருகிறார்.

பின்னர் விமான நிலையம் அருகே நடைபெறும் அரசு விழாவில் பங்கேற்று மத்திய,



மாநில அரசுகள் சார்பில் பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார். விழாவில் முதலமைச்சர் ரங்கசாமி மற்றும் கூட்டணி கட்சியினர் பங்கேற்கின்றனர்.

பிரதமர் மோடி பங்கேற்கும் அரசு விழா ஏற்பாடு தொடர்பாக சபாநாயகர் ஏம்பலம் செல்வம், உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், பா.ஜ.க. மாநில தலைவர் வி.பி.ராமலிங்கம் ஆகியோர் முதலமைச்சர் ரங்கசாமியை அவரது வீட்டில் சந்தித்து பேசினர். 2 மணி நேரம் நடந்த இந்த சந்திப்பில் பிரதமரின் வருகையின்போது அறிவிக்கப்பட வேண்டிய முக்கிய திட்டங்கள் குறித்து ஆலோசனை நடத்தினர்.

# தமிழகத்தில் புற்றுநோய் பாதிப்பு கிடுகிடு உயர்வு... சுகாதாரத்துறை அறிக்கையில் பகீர் தகவல்..!

சென்னை, பிப். 04–
தமிழ்நாட்டில் புதிதாக புற்றுநோய் பாதித்தவர்களின் எண்ணிக்கை ஒரே ஆண்டில் முதல் முறையாக ஒரு லட்சத்தை தாண்டியுள்ள தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் பாராளுமன்றத்தில் சமர்பித்த அறிக்கையில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.




அந்த அறிக்கையில், 2025ஆம் ஆண்டிற்கான சமீபத்திய புள்ளிவிவரங்களின் படி, மாநிலத்தில் புதிதாக புற்றுநோய் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 1,00,097ஆக உயர்ந்துள்ளது.

இது நிகழ்வுகளில் கூர்மையான மற்றும் தொடர்ச்சியான அதிகரிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இது தடுப்பு, ஆரம்பகால கண்டறிதல் மற்றும் சிகிச்சை திறன் குறித்து சுகாதார அதிகாரிகளிடையே கவலைகளை எழுப்புகிறது. வலுவான பரிசோதனை திட்டங்கள் மற்றும் வாழ்க்கை முறையில் தலையீடுகள் இல்லாமல், வரும் ஆண்டுகளில் எண்ணிக்கை தொடர்ந்து உயரக்கூடும் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். கடந்த ஐந்து ஆண்டுகளில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சீராக இருந்தது. 2020–ல் 68,750, 2021–ல் 76,968 ஆகவும்; 2022–ல் 89,265 ஆகவும்; 2023–ல் 92,816 ஆகவும்; 2024–ல் 96,486 ஆகவும் இருந்த நிலையில், 2025–ம் ஆண்டு ஒரு லட்சத்தை எட்டியுள்ளது.

இந்த தொடர்ச்சியான அதிகரிப்பு, அதிகரித்து வரும் நோய் சுமையையும், மாவட்டங்கள் முழுவதும் ஒருங்கிணைந்த பொது சுகாதார நடவடிக்கைகளுக்கான அவசரத் தேவையையும் எடுத்துக்காட்டுகிறது. 2025 ஆம் ஆண்டில் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட நோயாளிகளில், பெண்கள் 53,542 பேரும், ஆண்கள் 46,555 பேரும் ஆவர். தமிழ்நாட்டில் தற்போது புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1,09,097–ஐ எட்டியுள்ளது. அதன்படி, சென்னையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 8,505. காஞ்சிபுரத்தில் 7,295பேரும், வேலூரில் 6,525பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கிடையே, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறைபாராளுமன்றத்தில் சமர்ப்பித்த தரவுகளின்படி, 2025ஆம் ஆண்டில் 10,821 இறப்புகள் கருப்பை, மார்பகம் மற்றும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்களால் மட்டுமே ஏற்பட்டதாக தெரியவந்துள்ளது.

# தங்கம் விலை சவரனுக்கு ரூ.5,040 உயர்ந்து புதிய உச்சம்!



சென்னை, பிப். 04–
சென்னையில் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு 5,040 ரூபாய் அதிகரித்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 19 ஆயிரத்து 200 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. கிராமுக்கு 630 ரூபாய் அதிகரித்து ஒரு கிராம் 14 ஆயிரத்து 900 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த 2 நாட்களில் தங்கம் விலை சவரனுக்கு 7,600 ரூபாய் அதிகரித்துள்ளது.

வெள்ளி விலையும் கிராமுக்கு 20 ரூபாய் அதிகரித்து ஒரு கிராம் 320 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. கிலோவுக்கு 20 ஆயிரம் ரூபாய் அதிகரித்து ஒரு கிலோ 3 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

# கூட்டணிக்கு வந்தால் அள்ளித்தர நாங்கள் ரெடி: அதிரடி ஆபருடன் காங்கிரஸ் கட்சிக்கு த.வெ.க. அழைப்பு!

சென்னை, பிப். 04–
நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் தொடங்கப்பட்டு 2 ஆண்டுகள் ஆனபோதிலும் இந்த தேர்தலில் முதல்முறையாக களம் காண இருக்கிறது. அதுவும், 'முதல் தேர்தலிலேயே முத்திரை பதித்துவிட வேண்டும்' என்பதில் உறுதியாக இருக்கிறது. விக்கிரவாண்டியில் நடத்தப்பட்ட தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாட்டிலேயே கூட்டணிக்கு அச்சாரம் போட்டது. மாநாட்டில் பேசிய கட்சியின் தலைவர் விஜய், "சட்டசபை தேர்தலில் த.



வெ.க. கூட்டணிக்கு வரும் கட்சிகளுக்கு ஆட்சியில் பங்கு தரப்படும்'' என்று அதிரடி அறிவிப்பை வெளியிட்டார். தமிழகத்தில் அரை நூற்றாண்டு கால திராவிட கட்சிகள் ஆட்சியில், இதுபோன்று யாரும் கூட்டணி கட்சிகளுக்கு அதிரடி ஆபர் வழங்கியதில்லை.

**பா.ஜ.க.வின் வளர்ச்சி**

இதை சாதகமாக பயன்படுத்திக் கொள்ள நினைக்கும் காங்கிரஸ் கட்சியும், இந்த முறை தி.மு.க.விடம் ஆட்சியில் பங்கு, 41 தொகுதிகள், 2 ராஜ்ய சபா சீட், உள்ளாட்சி தேர்தலில் 20 சதவீதம் ஒதுக்கீடு என பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. இதற்கு காரணமாக, கடந்த 2024–ம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தல் முடிவுகளையும் சுட்டிக் காட்டுகிறது. இந்த தேர்தலில் தி.மு.க. கூட்டணி மொத்தம் உள்ள 39 தொகுதிகளிலும் வெற்றி பெற்றாலும், காங்கிரஸ் கட்சியை விட பா.ஜ. க.வின் வாக்கு சதவீதம் உயர்ந்தது. அதாவது, காங்கிரஸ் கட்சி 9 இடங்களில் போட்டியிட்டு வெற்றி பெற்றாலும், அதன் வாக்கு சதவீதம் 10.68 தான். அதே நேரத்தில், பா.ஜ.க. ஒன்றில்கூட ஜெயிக்கவில்லை என்றாலும் அக்கட்சி பெற்ற வாக்கு சதவீதம் 11.24 ஆகும்.

**காங்கிரஸ் கட்சி ஆட்சியில் பங்கு கேட்பது ஏன்?**

தமிழ்நாட்டில் இதுவரை இல்லாத பா.ஜ.க.வின் வளர்ச்சி, காங்கிரஸ் கட்சிக்கு மகிழ்ச்சியை தரவில்லை. அதனால்தான் இந்த முறை தி.மு.க. கூட்டணியில் அதிக இடங்கள், ஆட்சியில் பங்கு என கட்சியை வளர்ப்பதற்கான யோசனையும் கோரிக்கையை முன்வைத்து வருகின்றது.

இந்த நிலையில், தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய்யுடன் ஏற்கனவே காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி போன் மூலமும், மூத்த நிர்வாகி பிரவீன் சக்கரவர்த்தி நேரிலும் சென்று பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

**த.வெ.க. கூட்டணிக்கு வந்தால் எத்தனை இடங்கள்?**

ஆனால், தற்போது வரை தி.மு.க. கூட்டணியில்தான் தொடர்வதாக காங்கிரஸ் கட்சி கூறிவந்தாலும், த.வெ.க. நிர்வாகிகளுடன் தொடர்ந்து திரைமறைவில் பேச்சு வார்த்தையை நடத்தி கொண்டுதான் இருப்பதாக சொல்லப்படுகிறது. த.வெ.க.வுடன் கூட்டணி அமைத்தால், காங்கிரஸ் கட்சிக்கு 70 தொகுதிகள், 1 துணை முதல்–அமைச்சர் பதவி, 6 அமைச்சர் பதவி என வாரி வழங்க தயாராக இருப்பதாக விஜய் தரப்பில் கூறப்பட்டதாம். மேலும், 2029–ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் 28 தொகுதிகளையும் காங்கிரஸ் கட்சிக்கு வழங்குவதாக உறுதியளிக்கிறதாம்.

**காங்கிரஸ் நிர்வாகிகள் விரக்தி**

இப்படி, த.வெ.க.வின் அதிரடி ஆபர்களால் காங்கிரஸ் கட்சியும் யோசிக்கத் தொடங்கியிருக்கிறதாம். ஏற்கனவே, தி.மு.க.வுடன் கூட்டணி மற்றும் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தையை நடத்துவதற்காக ஒரு மாதத்திற்கு முன்பே காங்கிரஸ் கட்சியில் குழு அமைக்கப்பட்டும், இன்னும் பேச்சு வார்த்தைக்கு தி.மு.க. அழைக்கவில்லை. இதனால், காங்கிரஸ் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் கே.சி.வேணு கோபாலின் தமிழக வருகையும் தள்ளிக் கொண்டே போகிறது. காங்கிரஸ் நிர்வாகிகளும் விரக்தியில் உள்ளனர்.

**த.வெ.க.வுடன் கைகோர்க்க திட்டம்**

எனவே, த.வெ.க.வின் ஆபர்களை ஏற்று கைகோர்க்கலாமா? என்று காங்கிரஸ் யோசித்து வருகிறது. அடுத்து டெல்லியில் இருந்து வரும் காங்கிரஸ் மேலிட தலைவர்கள் நேரடியாக த.வெ.க. தலைவர் விஜய்யை சந்தித்து கூட்டணி பேச்சு வார்த்தை நடத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்று அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்படுகிறது.

# சத்துணவு ஊழியர்கள் சாலை மறியல்: நூற்றுக்கணக்கானோர் கைது!

தூத்துக்குடி, பிப். 04–
2021–ம் ஆண்டு தேர்தல் வாக்குறுதியின்படி சத்துணவு ஊழியர்களை முழுநேர அரசு ஊழியராக்கி, வரையறுக்கப்பட்ட காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், சத்துணவு, அங்கன்வாடி திட்டங்களில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்பது உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு சத்துணவு அங்கன்வாடி சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி அண்ணா பேருந்து நிலையம் பகுதியில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. மறியல் போராட்டத்துக்கு சங்கத்தின் தூத்துக்குடி மாவட்ட இணை ஒருங்கிணைப்பாளர் கனகவேல் முன்னிலை வகித்தார். இந்த போராட்டத்தில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகவீரபாண்டியன், ஓய்வூதிய பாதுகாப்பு இயக்க மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எபனேசர் டேனியல், தன்ராஜ், ஜெயலட்சுமி உள்பட 60–க்கும் மேற்பட்ட அங்கன்வாடி ஊழியர்கள் கலந்து கொண்டு சாலை மறியலில் ஈடுபட்டனர்.






போராட்டத்தில் ஈடுபட்டவர்களை போலீசார் கைது செய்து தனியார் மண்டபத்தில் தங்க வைத்தனர். திடீர் சாலை மறியல் காரணமாக அந்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதேபோல் திருநெல்வேலி மாவட்டம், வண்ணார்பேட்டை செல்லப்பாண்டியன் மேம்பாலம் அருகில் தமிழ்நாடு சத்துணவு அங்கன்வாடி சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் 2021–ம் ஆண்டு தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றக் கோரி திருநெல்வேலி மாவட்ட செயலாளர் குட்டியம்மாள் தலைமையில் மறியல் போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தேர்தல் வாக்குறுதியின்படி சத்துணவு ஊழியர்களை முழுநேர அரசு ஊழியராக்கி, வரையறுக்கப்பட்ட காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். சத்துணவு, அங்கன்வாடி திட்டங்களில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோசங்கள் எழுப்பினர். இதனை தொடர்ந்து மறியலில் ஈடுபட்ட 5 ஆண்கள், 98 பெண்கள் என மொத்தம் 103 பேரை பாளையங்கோட்டை போலீசார் கைது செய்து அருகிலுள்ள திருமண மண்டபத்தில் வைக்கப்பட்டனர்.

## சினிமா துளிகள்..!

# ஒரே நாளில் வெளியாகும் டாக்சிக் & துரந்தர் 2!




நடிகர் யஷ் நடிப்பில் உருவாகி இருக்கும் திரைப்படம் "டாக்சிக்''. கீத்து மோகன்தாஸ் இயக்கத்தில் பெரும் நட்சத்திர பட்டாளம் நடிக்கும் இந்தப் படம் வருகிற மார்ச் 19ஆம் தேதி வெளியாகிறது. நீண்ட கால படப்பிடிப்பில் உள்ள போதிலும், டாக்சிக் திரைப்படத்தின் ரிலீஸ் தேதியும் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டு விட்டது.

கே.ஜி.எஃப். 2 படத்தின் பிரமாண்ட வெற்றிக்கு பின் நடிகர் யஷ் நடிக்கும் படம் என்பதால் "டாக்சிக்'' படத்திற்கு துவக்கம் முதலே எதிரபார்ப்பு இருந்து வருகிறது. சமீபத்தில் இந்தப் படத்தின் டீசர் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றது. இந்த நிலையில் துரந்தர் படத்தின் இரண்டாம் பாகம் "துரந்தர் தி ரிவெஞ்ச்'' மார்ச் 19ஆம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்து இருக்கிறது.

பான் இந்தியா அளவில் கே.ஜி.எஃப். 2 மற்றும் துரந்தர் திரைப்படங்கள் வசூலில் ரூ. 1000 கோடியை கடந்து வெற்றி பெற்றன. இந்த நிலையில், யஷ் நடித்துள்ள டாக்சிக் மற்றும் ரன்வீர் சிங் நடித்துள்ள துரந்தர் தி ரிவெஞ்ச் ஒரே நாளில் வெளியாவது உறுதியாகி இருக்கிது.

**தேவை**

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:
செல் : 7904806432
போன்: 0452 – 4916699

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020